DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 32/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.5

Accused produced through VC

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சந்தனம் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of July, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது சேத்தூர் மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் லோடுமேன் வேலை பார்த்தேன். தற்போது பார்க்கவில்லை. வழக்கில் இறந்துபோனவரை தெரியும். அவர் பெயர் நீராவி. எதிரியை தெரியாது. நீராவி லோடுமேன் வேலை பார்த்தார். அதற்கு பின் என்ன வேலை பார்த்தார் என்று தெரியாது. சம்பவம் குறித்து என்ன தெரியும் என்றால் நீராவி என்பவர் இறந்துவிட்டார் என்ற விபரத்தை அவரது மனைவி சம்பவத்தன்று இரவு 12.00 மணிக்கு என்னை போனில் தொடர்பு கொண்டு சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு உடனே சென்றேன். அங்கு போலிசார் இருந்தார்கள். என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள்.

**(சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் நீராவி

குடியிருக்கும் வீட்டின் பக்கத்து வீட்டில் அய்யனார் குடும்பத்தாரை நீராவி தான் வாடகைக்கு வீடு பிடித்துக்கொடுத்தார் என்றும், அய்யனார் தினமும் இராத்திரி நேரத்தில் அசிங்கமாக பேசுவார் என்றும், அதனை நீராவி கண்டித்தும் அய்யனார் கேட்காததால் அய்யனாருக்கும் நீராவிக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும், நீராவி வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் என்னுடைய மனைவி முத்தம்மாளும் நீராவி மனைவி பரமேஸ்வரியின் அக்கா குருவம்மாளும் சத்தம் போட்டு அனுப்பியதாக சொன்னார்கள் என்றும், 31.05.2024 ம் தேதி இரவு 10.40 மணிக்கு தளவாய்புரத்தில் இருந்து என்னுடைய வீட்டிற்கு காமராஜர் தெரு வழியாக இருச்ககர வாகனத்தில் சென்றபோது எதிரே நீராவியின் மனைவி பரமேஸ்வரியும் அவரது மகள் பாண்டிமுனியும் பதட்டத்துடன் நடந்து வந்தார்கள் என்றும், விசாரித்தபோது நீராவி காவல் செய்யும் வீட்டின் வராண்டாவில் நீராவியும் அய்யனாரும் கத்தியுடன் சண்டை போடுவதாக வீட்டுக்காரர்கள் தகவல் சொன்னதால் அங்கு செல்வதாக சொன்னவர்கள் என்னையும் அழைத்தார்கள் என்றும் , நானும் அவர்களுடன் இரவு 10.50 மணிக்கு அங்கு சென்றோம் என்றும், நீராவி காவல் செய்யும் வீட்டின் முன்பக்க வராண்டாவில் அய்யனார் கத்தியுடன் நீராவியுடன் மல்லுக்கட்டிக்கொண்டு இருந்தார் என்றும், அதனை பார்த்த நாங்கள் இருவரையும் சமாதானப்படுத்தியபோது அய்யனார் நீராவியை பார்த்து அசிங்கமான வார்த்தையில் பேசி எப்ப பார்த்தாலும் என்கூட சண்டை போட்டு என்னை நிம்மதி இல்லாமல் செய்துட்டே உன்னை கொன்றால் தான் எனக்கு நிம்மதி. இத்தோடு செத்து தொலைந்து போய்விடு என்று நீராவியின் இடது பக்க கழுத்தில் ஓங்கி குத்தி வலது பக்க கழுத்து வரை கிழித்து காயப்படுத்தினார் என்றும், மீண்டும் குத்திய போது நீராவி இடது கையினால் தடுத்தபோது இடது முழங்கையிக்கு கீழ் கத்திக்குத்து பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மீண்டும் நீராவியின் வலது பக்க வயிற்றில் அய்யனார் பலமாக கத்தியால் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், நீராவியின் கழுத்து மற்றும் வயிறு வழியாக வழிந்த இரத்தத்தை இறுக்கிபிடித்தவாறு கீழே

விழுந்தார் என்றும், அப்போதும் அய்யனார் கத்தியால் குத்தப்போனபோது நாங்கள் சத்தம் போட்டுக்கொண்டே அய்யனாரை பிடிக்க முயற்சி செய்தோம் என்றும், அப்போது அய்யனார் எங்களை நோக்கி கத்தியை காட்டி எவனாவது கிட்ட வந்தால் அவர்களுக்கும் இதே கதிதான் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார் என்றும், இரத்த வெள்ளத்தில் கிடந்த நீராவி நாயக்கரை மருத்துவமனைக்கு சென்றால் காப்பாற்றிவிடலாம் என்று தனியார் ஆம்புலனஸ் மூலம் இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தபோது மருத்துவர் நீராவியை பரிசோதனை செய்து பார்த்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துபோய்விட்டதாக கூறினார் என்றும், நடந்த சம்பவத்திற்கு நீராவியின் மனைவியும் மகளும் காவல் நிலையத்திற்கு சென்றார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 32/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.6

Accused produced through VC

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.குட்டிதுரை | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of July, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது சேத்தூர் சமத்துவபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சித்துராஜை தெரியும். அவர் எனது வீட்டிற்கு அருகாமையில் வசித்து வருகிறார். இந்த வழக்கு சம்பந்தமாக என்ன தெரியும் என்றால் நான் டீ குடித்துவிடடு ஜீவா நகரிலிருந்து வந்து கொண்டிருந்தபோது என்னிடம் போலிசார் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கையெழுத்து மட்டும் **அசாஆ 6** ஆகும். எங்கள் முன்னிலையில் எதுவும் போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ 7 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை . (சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் நானும் சாட்சி சித்துராஜ் என்பவரும் எனது வீட்டிலிருந்து தளவாய்புரத்திற்கு காமராஜர் நகர் வழியாக வந்து கொண்டிருந்தபோது கடந்த 01.06.2024ம் தேதி அதிகாலை தளவாய்புரம் காவல் ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் இருவரின் சம்மதம் பெற்று எரியும் மின்விளக்கு மற்றும் கையில் வைத்திருந்த டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்தனர் என்றும், அதன்பின்னர் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் பட்ட சிமிண்ட் தரை மற்றும் இரத்தம் படாத சிமிண்ட் தரை இரண்டையும் அதிகாலை 4.00 மணிக்கு அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள் என்றும் நாங்கள் இருவரும் மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

ஜீவா நகர் என்பது சேத்தூருக்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.